Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/2022

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : **கருப்பசாமி** | Father/Husband Name | : **ராமசாமி** |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 09.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 04.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**1,2 எதிரிகள் ஆஜர், 3, 4 ஆஜர் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலூர் சின்னபெருமாள்பட்டியில் குடியிருந்து கொண்டு எலெக்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். அசா1 கண்ணனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும், இவ்வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும்,. வழக்கின் சாட்சிகள் கோடிஷ்வரன், தங்கமணி, ராஜ்குமார், ஆகியோர்களை தெரியும். சுமார் 4,1/2 வருடத்திற்கு முன்னர் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது சின்னம்மா அம்மாபொன்னு எனக்கு போன் செய்து எனது அண்ணன் கண்ணனை அடித்ததாக சொன்னார். அதன்பின்னர் நான் மேலூர் அரசு மருத்துவனைக்கு வந்தேன். அப்போது எனது அண்ணன் கண்ணன் தலையில் அடிப்பட்டு மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தார். பக்கத்து ஊர்க்காரர் எனது அண்ணன் கண்ணனை அடித்ததாக எனது சின்னம்மா என்னிடம் சொன்னார். சிறிது நேரத்தில் கொட்டாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து அங்கு வந்தார்கள். அவர்கள் கண்ணனை விசாரித்தார்கள். கண்ணன் சொன்னதை போலீசார்

எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ12 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

**1,2 எதிரிகள் ஆஜர், 3, 4 ஆஜர் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையில் செய்துள்ள கையொப்பம்போல்தான் எப்போதும் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் பெயர்கள் கூட எனக்கு தெரியாது என்றால் சரிதான். கண்ணன் உடன் இருந்தவர்கள் பெயரும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன், எத்தனை மணிக்கு போலீசார்கள் அங்கு வந்தார்கள் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை, ஆனால் போலீசார்கள் அங்கு வந்தார்கள். நான் போலீசார் கண்ணனை விசாரிக்க வந்தபோது அவர்கள் கண்ணனுடன் அடைத்த அறையில் இருந்தார்கள், நான் வெளியே இருந்தேன் என்றால் சரிதான். நான் வெளியே இருந்ததனால் எனது அண்ணன் கண்ணன் என்ன விவரத்தை போலீசாரிடம் சொன்னார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.